முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 03.06.2025.  அ.வ.எண்.229/2020.  வா.சா.1 .ரவிசந்திரன், த/பெ. கோவிந்தராஜ்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு  பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) பிரதிவாதிகளின் சொத்தானது எங்களுடைய சொத்தின் கிழக்கு , வடக்கு மூலைக்கு வடபுறமாகவும் க.ச.எண். 480/11 க்கு கிழபுறமாகவும் அமைந்துள்ளது என்றால் சரிதான். ஆனால் க.ச. எண் 480/11 உட்பிரிவு என்பது த வறாகும். எங்களுடைய சொத்தின் கிழக்கு , வடக்கு மூலைக்கு வடபுறம் தான் பிரதிவாதிகளின் மாட்டு கொட்டகை மற்றும் புறவடை உள்ளது என்றால் சரிதான். அந்த மாட்டு கொட்டகை மற்றும் புறவடைக்கும் செல்லக்கூடிய வழியானது க.ச,எ ண். 480/11 ல் அமைந்துள்ள வழியாகத்தான் செல்லமுடியும் என்றால் சரியல்ல, மேற்படி க.ச.எண் ஆனது தவறுதலாக உட்பிரிவு செய்யப்பட்டதாகும்.

2) மேற்படி பிரதிவாதிகளின் சொத்தின் மாட்டு கொட்டகை மற்றும் புறவடை சுவற்றில் ஒரு கதவு அமைந்துள்ளது என்றால் சரிதான். கடந்த 2020 ம் வருடம் நாங்கள் மாண்பமை சென்னை நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண். 11040/2020 தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான்.  அதன்மீது உரிய விசாரணை நடத்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் தாசில்தார் அவர்கள் அறிக்கை ஒன்றை மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் அதன் பேரில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளோம். அந்த அறிக்கையில் க.ச.எண். 480/11

ஒப்பம்/– (R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

ஆனது வருவாய்துறை ஆவணங்களில் நத்தம் காலியிடம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான்., ஆனால் எங்களுக்கு பத்திரப்படி பாத்தியப்பட்ட இடமாகும்.

3) நான் தாக்கல் செய்துள்ள வா சா ஆ 2 மற்றும் 3 ஆவணங்களில் காலியிடத்தை பற்றி எவ்வித குறிப்பும் இல்லை என்றால் சரிதான். அதிலிருந்த வீட்டை இடித்த இடம் தான் காலியிடம் ஆகும். மேற்படி ஆவணங்களின் படியான சொத்துக்கள்  ஒரு அருணாச்சலம் செட்டியார் என்பவர் உடுமலை உரிமையியல் நீதிமன்றத்தின் மூலம் ஏலத்திற்கு எடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொத்துக்களை அருணாச்சலம் செட்டியாரின் அதிகார முகவரான சாகின்னார் கெங்கம்மாளுக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வில்லங்க சான்றிதழில் அவ்வாறு வரவில்லை. மேற்படி  சாகின்னார் கெங்கம்மாளிடம் இருந்த எனது தாத்தா பாப்பநாயக்கர் கடந்த 11.12.1942 ம் ஆண்டு கிரயம் பெற்றார் என்றால் சரியல்ல.

4) தாவா சொத்தின் மூலங்களை மறைத்து எங்களுக்கு சாதகமான ஆவணங்களை தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மாண்பைமை சென்னை உயர்நீதிமன்றம் க.ச,.எண். 480/11 என்பது நத்தம் காலியிடம் என்று உத்தரவு பிறப்பித்தும் அதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அரசு புறம்போக்கு நிலம் என்று தெரிந்தும் அதனை நான் ஆக்கிரமிப்பு செய்து பிரதிவாதிகளுக்கும், ஊர் பொதுமக்களுக்கும் இடையூறு செய்யும் விதமாக ஒரு பந்தல் அமைத்து தொடர்ந்து இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. அதனால் நான்

ஒப்பம்/– (R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு சட்டப்படி கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல, வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/– (R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.